JUDICIAL MAGISTRATE COURT, TIRUTTANI
DEPOSITION OF WITNESS

M.C.No.1/2018 Date:31.12.2020 R.W.3

பெயர் : தெய்வாணை
தந்தை பெயர் க.பெ. : சண்முகம்
முகவரி :
கிராமம் :குருவராஜபேட்டை
மாவட்டம் :
ஜாதி :
தொழில் : தமிழ் ஆசிரியர், பணி ஓய்வு.
மதம் :
வயது :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 31st day of December 2020.

குறுக்கு விசாரணை

மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் இடையேயான குடும்ப பிரச்சனை எனது தங்கை சொல்லி தெரியும். எனது தங்கை கூறியதின் அடிப்படையிலும் சிலதை நான் நேரடியாக பார்த்துள்ளதின் அடிப்படையிலும் நான் இங்கு சாட்சி சொல்லவந்துள்ளேன். மனுதாரர் எதிர் மனுதாரரின் குடும்ப சொத்து சம்மந்தமாக எதும் தலையிடவில்லை என்றால் குடும்ப சொத்து தான் முதல் தலையாய பிரச்சனை அதில் மனுதாரர் தலையிட்டார். முதல் விசாரணையில் எதிர் மனுதாரரின் தாயாரை மனுதாரர் தகாத வார்த்தையால் திட்டியுள்ளதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல அது உண்மை தான், ஆனால் அதை நான் நேரில் பார்க்கவில்லை. மனுதாரரை எதிர் மனுதாரர்கள் மற்றும் அவரது குடும்பத்தார் வேலைக்கு போக சொன்ன விசயம் தெரியுமா என்றால் அவ்வாறு வேலைக்கு ஏதும் போக சொல்லவில்லை குழந்தையுடன் வீட்டில் தான் இருக்க சொன்னார். மனுதாரரை எதிர் மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் கட்டாயபடுத்தி வேலைக்கு போக சொன்னார்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் எதிர் மனுதாரரின் கட்டாயத்தின் பேரில் தான் தனது குழந்தையை அம்மா வீட்டில் விட்டுவிட்டு வேலைக்கு சென்றார் என்றால் அவ்வாறு இல்லை சொத்து பிரச்சனை காரணமாக தான் மனுதாரர் தனது குழந்தையை அம்மா வீட்டில் விட்டுவிட்டு ஒசூர் சென்றார். பொதுவாக எங்கள் சமூகத்தில் மாப்பிள்ளை வீட்டார் தான் பெண் கேட்டு செல்வார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணை பாரா 2ல் கூறியுள்ளபடி மணிவண்ணன், கோபால் ஆகியோர் உங்கள் வீட்டிற்கு வரவில்லை அது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல அவர்கள் நான்கு முறை வந்தனர். மனுதாரரை சமாதானம்படுத்துவதற்காக தான் ஒசூரில் வீடு கட்டி கொடுக்கபட்டது என்றால் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் இடையே சொத்து பிரச்சனை இருந்ததால் தான் ஒசூரில் வீடு கட்டபட்டது. எதிர் மனுதாரர் பெயரில் வீடுகட்டவேண்டும் என்ற காரணத்திற்காக தான் வீடு கட்டப்பட்டது என்றால் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதற்காக கட்டிக்கொடுக்கபட்டது. எதிர் மனுதாரரின் கொடுமையின் காரணமாக தான் மனுதாரர் தனது தாய் வீட்டிற்கு சென்றார்

என்றால் சரியல்ல. மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் இருவரும் சேர்ந்து வாழ பல முயற்சிகள் எடுத்தும் எதிர் மனுதாரர் அதனை தவிர்த்துள்ளார் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் மனுதாரர் மற்றும் குழந்தை மீது பாசம் மற்றும் அக்கறை அற்று ஒருபொழுதும் நல்ல கணவராகவோ, தகப்பனாராகவோ இருந்ததில்லை என்றால் சரியல்ல. அவ்வாறாக எதிர் மனுதாரர் நல்ல கணவராகவோ, தகப்பனாராகவோ இருந்திருந்தால் இந்த கோவிட் 19 காலத்தில் மனுதாரர் மற்றும் குழந்தை வந்து பார்த்திருப்பார் என்றால் கடந்த 4 வருடமாக ஒட்டுபத்து இல்லை என்பதனால் அவர் வந்து பார்க்கவில்லை. முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் நெமிலிசேரி என்ற இடத்தில் மனுதாரர் பெயரில் வீட்டுமனை வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது மனுதாரரின் அப்பா சொன்னதின் பேரில் எனக்கு தெரியும். மனுதாரரின் தகப்பனார் தான் நெமிலி சேரியில் வீட்டுமனை வாங்கி கொடுத்தார் ஆனால் பணம் சிவபாலனுடையது. எதிர் மனுதாரரின் பணம் இல்லை என்றால் சரியல்ல. திருத்தணி செங்குந்தர் சத்திரத்தில் சமாதானம் பேசியத்திற்கு ஆதாரம் ஏதும் இல்லை என்றால் சரிதான் பஞ்சாயத்து பேசுவது போல் பேசினோம். திருத்தணி செங்குந்தர் சத்திரத்தில் சமாதானம் பேசியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல பேசினோம். மனுதாரர் தனது குழந்தையை தனது அம்மா வீட்டில் விட்டுவிட்டு ஓசூரில் வந்து வேலைக்கு சேர் என்று எதிர் மனுதாரர் கூறியதனால் தான் அங்கு சென்றார் என்றால் சரியல்ல சொத்து பிரச்சனை காரணமாக தான் மனுதாரர் ஓசூர் சென்றார். சொத்து பிரச்சனை காரணமாக தான் மனுதாரர் குழந்தைக்கு தாய்பால் கொடுக்காமல் இருந்தார் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளது தவறான சங்கதி என்றால் சரியல்ல. நேரடியாக சங்கதிகள் ஏதும் தெரியாமல் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல எனக்கு நேரடியாக தெரிந்ததை தான் சொல்கிறேன்.

மறு விசாரணை : இல்லை.

Typed to my dictation in open court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Tiruttani.